மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 05 ம் நாள் திங்கள்கிழமை

இ.ம.எண்.03/2025
உள்
அசல் வழக்கு எண்.39/2019
––––––––

1. K. ராமர் (இறப்பு)
2. கற்பகவள்ளி
3. கிருஷ்ணகுமார்
4. சுப்புலட்சுமி ...மனுதாரர்கள்/உத்தேசவாதிகள்

/எதிர்/

1, Merit S. E. பெருமாள்சாமி
2. பரிமளா கங்கா .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 22.04.2025ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 15.12.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/உத்தேச வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. இலட்சுமி காந்தன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை மனுதாரர் தரப்பு மனு மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் 151–ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா வழக்கில் சமூகம் நீதிமன்றம் கடந்த 22.06.2022ம் தேதி பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய மனு செய்வதில் ஏற்பட்ட 1005 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து தாவா வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டி மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/உத்தேச வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

2.1. மனுதாரர் இம்மனுவில் 3ம் மனுதாரர். அசல் வழக்கில் வாதியான ராமரின் மகன் ஆவார். மற்ற மனுதாரர்களுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரது தகப்பனார் பிராது தபசில் சொத்திற்கு சர்வே எண்.2/2 வழியான குறிப்பாக 2ம் பிரதிவாதி இடத்தின் வழியாக அத்தியாவசியமான நடைபாதை வசதி உள்ளது என்று விளம்புகை பரிகாரமும், அதனை அனுசரித்து மனுதாரரோ, வாதிகளோ அவர்களது வகையாட்களோ அனுபவம் செய்வதை பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கு வாதி தரப்பு விசாரணையின் போது மனுதாரரது தகப்பனார் வாதி தரப்பு 1ம் சாட்சியாக முதல் விசாரணை செய்யப்பட்டு அதன்பின்னிட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில் கடந்த 03.11.2021ம் தேதி உடல்நலக் குறைவினால் மனுதாரரது தாயாரான மூக்கம்மாள் அவரது சகோதரிகள் கற்பகவள்ளி, சுப்புலட்சுமி மற்றும் மனுதாரரையும் அவரது சட்டப்படியான வாரிசுகளை விட்டுவிட்டு இறந்துவிட்டார்.

2.2. மனுதாரரும் அவரது சகோதரிகளும் மனுதாரர்களின் தகப்பனார் இறந்த பின்பு கடந்த 19.04.2025ம் தேதி அவரது பழைய பெட்டியை பார்த்தபோது அவரது தகப்பனார் தாவா வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்ற விபரம் மனுதாரர்களுக்கு தெரிய வந்துள்ளது. மேற்படி வழக்கு குறித்த விபரம் தெரிந்த பின்பு மேற்படி வழக்கு நடத்திய வழக்கறிஞரை தொடர்பு கொண்ட போது மனுதாரர்கள் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கு கடந்த 22.06.2022ம் தேதி மனுதாரரது தகப்பனாரின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மனுதாரர்களுக்கு 19.04.2025ம் தேதி தெரிய வந்துள்ளது. அதன்பின்பு மேற்படி வழக்கை கோப்பிற்கு எடுத்து மனு செய்வதில் 1005 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாகவும், அறியாமையின் காரணமாகவும் ஏற்பட்டதாகும். எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் .

எனவே மனு தாக்கல்.

3) **<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்–</u>**

3.1. இதனடியில் வியாத்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் விஷயங்கள் தவிர மற்ற விஷயங்கள் யாவும் உண்மைக்கு புறம்பாக உள்ளது என மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனு தாக்கல் செய்ததில் ஏற்பட்ட 1114 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க சொல்லியுள்ள காரணங்கள் மேற்படி மனுவில் ஏற்பட்டிருக்கும் காலதாமதத்தை மன்னிக்க போதுமான காரணம் ஏதும் சொல்லப்படவில்லை. மேற்படி 3ம் மனுதாரரர் தகப்பனார் திருநெல்வேலியிலுள்ள சுத்தமல்லி ஹவுசிங் போர்டு கதவு எண்.48 என்ற முகவரியில் குடியிருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் விலாசம் திருநெல்வேலி விலாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

3.2. தபசில் சொத்து சாத்துாரில் அமைந்துள்ளது. அதனால் மனுதாரர் தகப்பனார் தாவா வழக்கு ஆஜராக சாத்துார் வரும்போது அவரது மனைவி மற்றும் பிள்ளைகளிடம் தெரிவித்துவிட்டுதான் சாத்துார் வந்து செல்வார். அதனால் மனுதாரருக்கும் அவரது மனைவிக்கும் தாவா வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து தள்ளுபடியான விபரமும் நன்கு தெரியும். மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே 2022ம் வருடம் தள்ளுபடியான பிராதை கோப்பிற்கு எடுக்கவும், காலவரையறை சட்டம் பிரிவு 5ன் படியும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுக்களை மனுதாரர்கள் மேல் நடத்தாமல் விட்டுவிட்டார்கள். மேற்படி மனுவில் தள்ளுபடியான பிராதை மீண்டும் கோப்பிற்கு எடுத்திருக்கும் மனுவில் சரியான காரணங்கள் சொல்லவில்லை. மனுதாரர்களுக்கு 2022 மனுக்களில் சொல்லிய விபரத்திற்கும் 2025ல் தாக்கல் செய்துள்ள மனுக்களில் சொல்லியுள்ள விபரத்திற்கும் வித்தியாசம் உள்ளது.

3.3. மனுதாரர்கள் 2022ல் தாக்கல் செய்த மனுக்களை கோப்பிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்காமல் 3 ஆண்டுகள் கழித்து புதிய மனுக்கள் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது. தாவா அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எந்தவித வெற்றி வாய்ப்பும் இல்லாததால் இந்த எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வழக்கு செய்திருப்பது சட்டப்படிக்கும்,

நியாயப்படிக்கும் செல்லாது. எனவே தாவா மனுவை எதிர்மனுதாரர்கள் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**<u>7) தீர்வு</u>:-**

**7.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் 3ம் மனுதாரர். அசல் வழக்கில் வாதி ராமரின் மகன் ஆவார். தாவா வழக்கு கடந்த 22.06.2022ம் தேதி பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய மனு செய்வதில் ஏற்பட்ட 1005 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரரின் தகப்பனார் இறந்த பின்பு கடந்த 19.04.2025ம் தேதி அவரது பழைய பெட்டியை பார்த்தபோது தான் மனுதாரரின் தகப்பனார் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பது தெரிய வந்ததாகவும், அதன்பின்பு வழக்கறிஞரை தொடர்பு கொண்ட போது மனுதாரர்களின் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கு 22.06.2022ம் தேதி மனுதாரரின் தகப்பனாரின் வருகையின்மையால் வழக்கு தள்ளுபடியான விபரம் தெரிய வந்துள்ளதாகவும், அதன்பின்பு வழக்கை மேல்நடத்த வேண்டி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1005 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில், மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**7.3.** மனுதாரர்களின் மனுவை பரிசீலனை செய்து பார்த்ததில் மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் போதுமான இல்லை என்ற போதிலும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டும், வழக்கின் வயதை கருத்தில்

கொண்டும், வழக்கு விசாரணையை விரைவாக எடுத்துச் செல்லும் பொருட்டு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால், காலதாமதத்தை பொறுத்து செலவுத் தொகையை ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட சமரச மையத்திற்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மேலும் மனுதாரர்கள் இந்த வழக்கு சம்மந்தமான ஒவ்வொரு நிகழ்வுகளையும் தொடர்ந்து பொறுப்புடன் பின்பற்ற வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது.

**8. இறுதி முடிவு**

இறுதியாக, மனுதாரர்கள் செலவுத் தொகை ரூ.1200/-ஐ ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட சமரச மையத்திற்கு 02.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா -02.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 05ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.03/2025
உள்
அ.வ.எண்.39/2019
**<u>உத்தரவு</u>**
நாள்– 05.01.2026